DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.103/12

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name வாசுகி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது சென்னையில் வசிக்கிறேன். நான் வேலைக்கு செல்வதில்லை. எனக்கு சொந்த ஊர் தேனி. எனக்கு எதிரிகளை தெரியும். அசா1 ஐ எனக்கு தெரியும். நான் ஊஞ்சாம்பட்டிகிராமத்தில் சர்வேஎண் 186/2 ல் மொத்தம் 1 ஏக்கர் 50 செண்ட் நிலம் பிரபாகரன் என்ற பொதுஅதிகாரம் பெற்ற முகவரிடமிருந்து கடந்த 2007 ம் ஆண்டு கிரயம் வாங்கினேன். அந்த நிலத்தை பராமரிக்கும் பொருட்டு அசா1 க்கு நான் 2009 ம் ஆண்டு பொதுஅதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன். அசா1 தேனி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த ஸ்டேடஸ்கோ உத்தரவு வாங்கியிருந்தார் அந்த நிலையில் எதிரிகள் மேற்படி நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து குடிசை போட்டிருந்தார்கள். இது சம்மந்தமாக பிசிபட்டி காவல்நிலையம் மற்றும் எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தார். அதன்பிறகும் எதிரிகள் அசா1 மற்றும் அவருடன் சென்றவர்களை மிரட்டினார்கள். இது சம்மந்தமாக சுமார் 4 அல்லது 5 முறை போலிசில் புகார் கொடுத்துள்ளோம். 1 ம் எதிரி என்னுடைய நிலத்திற்கு சம்மந்தம் இல்லாத சுப்பையா என்பவர் 1994 ல் இறந்துபோனதாக இறப்பு சான்றிதழை வைத்துக்கொண்டு லட்சுமணன் என்ற பொதுஅதிகாரம் பெற்றவர் மூலம் தீனதயாளனுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள். அதன் ஆவண எண். 367/1994 . பின்னிட்டு 7 ம் எதிரிமுத்து என்பவரும் அதே சுப்பையா என்பவர் 1966 ல் இறந்துபோனதாக இறப்பு சான்றிதழ் வைத்துக்கொண்டு சுப்பையாவின் உண்மையான வாரிசுகள் என்று சொல்லிக்கொண்டு மேற்படி சொத்தின் மீது உரிமை கொண்டாடினார்கள். அவர்களும் 2009 ம் ஆண்டு வாக்கில் ஆக்கிரமிப்பு செய்தார்கள். அதனால் நான் 1 ம் எதிரி போஸ், 7 எதிரி முத்து ஆகியோர் மீது சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து எனக்கு சாதகமாக தீர்ப்பானது. அதன்பின்னர் மேற்படி சொத்தின் சுவாதினம் என்வசம் தான் இருந்து வருகிறது. எதிரிகள் எங்களிடம் பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவ்வாறு செய்துள்ளார்கள். அசா1 ஐ 1 ம் எதிரி பணம் கொடுத்தால் தான் நாங்கள் விடுவோம்என்றும் கொடுக்காவிட்டால் அடிப்போம் என்று மிரட்டியுள்ளார். சுப்பையா என்பவருக்கு 1 ஏக்கர் 50 செண்ட் நிலம் மட்டும் தான் பாத்தியம் அந்த நிலத்தை அவரின் வாரிசுகள் விற்பனை செய்துவிட்டார்கள். அவர்கள் எழுதிகொடுத்த கிரய ஆவணத்தில் கிரய சொத்தின் தென்புற நிலம் வெள்ளிமலையம்மாள் பாத்தியப்பட்ட நிலம் என காட்டியுள்ளார். அந்த நிலத்தை தான் நான் கிரயம் பெற்றேன். மேற்படி சம்பவம் தொடர்பாக அசா1 போலிசில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

என் புகாரில் அழகிரி மாதாரியும் கிமன் மாதாரியும் சர்வேஎண் 186 ல் உள்ள 3 ஏக்கர் நிலத்தை சரிசமமாக பிரித்துக்கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அழகிரி மாதாரிக்கும் கிமன் மாதாரிக்கும் எந்த பக்கம் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. தென்புறம் உள்ள 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை தான் நான் கிரயம் வாங்கியதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் புகரில் மாதிமாதாரியிடமிருந்த 20.1.1953 ல் ஆவண எண். 112/1953 என்றஆவணத்தின் மூலம் சர்வேஎண்

186 ல் 1 எக்கர் 50 செண்ட் கிரயம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சின்னசீனிசெட்டியார் மாதிமாதாரியிடமிருந்து கிரயம் வாங்கிவில்லை காமாடசியம்மாளிடமிருந்து கிரயம் வாங்கினார். 20.1.53 ம் தேதியிட்ட ஆவண 112/53 ஐ முழுமையாக படித்து தெரிந்துக்கொண்டேன். அந்த நிலத்தை தான் ஆவண எண். 294/55 ன் மூலம் சின்னசீனிசெட்டியார் சுப்பையகுறும்பனுக்கு கிரயம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். சர்வேஎண் 186 ல் 3 ஏக்கர் அழகிரி மாதாரியும் கிமன் மாதாரிக்கும் சொந்தம் என ௌசால்லபப்பட்டுளளதுஎன்றால் சரிதான். கிமன் மாதாரி சின்னசீனிசெட்டியாருக்கு கிரயம் கொடுத்தார் என்று போலிச் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். சின்னசீனிசெட்டியார் கிரயம்வாங்கிய ஆவண எண் 112/1953 மூலம் கிரயம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஞபாகம் இல்லை. சின்னசீனிசெட்டியார் ஆவணஎண் 294/53 மூலம் சுப்பையாகுறும்பனுக்கு கிரயம் கொடுத்துள்ளார் கொடுத்தார் என்று போலிச் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். மொத்தம் சர்வேஎண் 3 ஏக்கர் எந்த பகுதியில் வாங்கி எந்த பகுதியில் விற்றார்கள் என்ற ஞபாகம் இல்லை. எதிரிகள் சுப்பையா குறும்பனின் வாரிசுகள் என்று போலிச் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். 1994 ல் 1 முதல் 6 எதிரிகள் சர்வேஎண் 186 ல் மொத்தம் 3 ஏக்கரில் வடபக்கம் 1 ஏக்கர் 50 செண்டை விற்றார். சுப்பையா, மாதாரி, வெள்ளிமலையம்மாள் கிரயம் வாங்கும் போது சர்வேஎண் 186 ல் 1984 வரைக்கும் 3 பேரிலும் கூட்டு பட்டா இருந்ததாக போலிச் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் ஞபாகம்இல்லை. சர்வேஎண் 186 ல் முழுமையயாக இருந்த இந்த சொத்து 1999 ல் உடைக்கப்பட்டது. 1999 ல் இரண்டு பிரிவுகளாக செய்யும் போது வெள்ளிமலையம்மாள் பேரில் பட்டா இருந்ததாக போலிச் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். 20.1.1953 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் ஞபாகம் இல்லை. சின்னசீனிசெட்டியார் காமாட்சி மாதாரிக்கு சர்வேஎண் 186 ல் எந்த திசையில் விற்றார் என்றால் வடக்கு திசையில் உள்ளதை விற்றதாக போலிச் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். 1953 முன்னாடியே சர்வேஎண் 186 ல் 3 ஏக்கர் நிலத்தை வாக்கரலாக பாகம் பிரித்துக்கொண்டதாக போலிச் விசாரணையின் போது சொல்லியுள்ளேன் என்றால் ஞபாகம் இல்லை. நான் கிரயம் வாங்கிய சொத்து ஆதியில் ஒரு சுப்பையாகுறும்பன் என்பவருக்கு பாத்தியம என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரய சொத்து ஏற்கனவே சுப்பையாகுறும்பன் என்பவர் சின்னசீனிசெட்டியார் என்பவரிடமிருந்து 1953 ல் கிரயம் வாங்கி 1984 வரை அவர் பெயரில் கூட்டு பட்டா இருந்து வந்தது என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்கிய சொத்தை 1 முதல் 6 எதிரிகள் எப்போதும் யாருக்கும் விற்பனை செய்ததில்லை என்றால் சரியல்ல. 1994 ல் லட்சுமணனுக்கு பவர் கொடுத்த பகுதி வடபக்கம். 1994 ல் 1 முதல் 6 எதிரிகள் கிரயம் கொடுத்த சொத்தும், சுப்பையாகுறும்பன் கிரயம் வாங்கிய சொத்தும் ஒன்று தான். 1955 ல் சுப்பையாகுறும்பன் வாங்கிய மொத்தம் 3 ஏக்கரில் 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. சுப்பையாகுறும்பனுக்கு கிரயம் மூலம் பாத்தியப்பட்ட தென்புறமுள்ள 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை தான் நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் விற்பனை செய்த சொத்திற்கும் சுப்பையாகுறும்பன் கிரயம் வாங்கிய சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்திற்கு நான்கு மால் மற்றும் பட்டா எண் தெரியாது. எந்த எந்த தேதியில் எதிரிகள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று தெரியாது. ஸ்டேடஸ்கோ உத்தரவை போலிச் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் ஞபாகம் இல்லை. அதன் வழக்கு எண் தெரியாது. எந்த தேதியில் உத்தரவானது என்றும் ஞபாகம் இல்லை. நான் சொன்னது போல் சம்பவ தேதியில் எனக்கு சாதகமாக உத்தரவும், சிவில் வழக்கும் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சண்டை போட்ட விபரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அசா1 சொல்லி தான் தெரியும். போஸ் என்ற எதிரி பெயர் மட்டும் தெரியும் மற்ற எதிரிகள் பெயர் எனக்கு தெரியாது. குடிசைப்போட்டிருந்தார்கள் என்பதை போலிச்விசாரணை மற்றும் புகாரில் சொல்லியுள்ளேன். பணம் கேட்டு மிரட்டியதற்காக போலிசில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்தார்கள். அதை நான் போலிச்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் விஞ்ஞானியாக இருக்கிறார். அவர் நெதர்லாத் நாட்டில் உள்ள அரசு பல்கலைகழகத்தில் பணிபுரிகிறார். அவர் உயிரியில் தொழில்நுட்ப துறையில் பணிபுரிந்துவருகிறார். அசா2 எனக்கு உறவினர். பிரபாகரன் என்பவரை எனக்கு எவ்வளவு நாளாக தெரியும் என்றால் பவர் கொடுத்ததால் மட்டும் தெரியும். என் கணவர் விஞ்ஞானியாக வேலை பார்ககவில்லை என்றாலும்

பிரபாகரனுடனும் மற்றும பல நபர்களுடன் சேர்ந்து ரியல்எஸ்டேட் தொழில் செய்கிறார் என்றால் சரியல்ல. 1953 சுப்பையாகவுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அசா1 பொய்யாக புகார் கொடுத்து நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த விபரம் தெரிந்துவிடக்கூடாது என்பதால் தான் புகார் மற்றும் போலிச்விசாரணையின் போதும் மொத்தமுள்ள 3 ஏக்கர் நிலத்தில் நான் கிரயம் பெற்ற நிலம் எந்த பக்கத்தில் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.